# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 28*

*ஆகஸ்ட், 2011*

*vidiyalmagazhine.blogspot.com*

*vidiyalmagazhine@gmail.com*



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
***www.ksrcasthamizh.blogspot.com***
***www.ksrcas.edu***


# உள்ளடக்கம்

## குறுங்கட்டுரைகள்


*தேசியக்கொடி* 02,
*பார்பாய்ஸ் பிராணி* 14,
*காப்பி X புற்றுநோய்* 18,


## கட்டுரைகள்


*தோழர் ஜீவா* 06,
*குன்றக்குடி அடிகளார்* 15,
*திரு.வி.க.* 11,
*கிருபானந்த வாரியார்* 18,


## துளிச்செய்திகள்


*மனிதக் கணக்கு* 10,
*நீங்கள் விரும்பினால்* 14


## மாதம் ஒரு படைப்பாளர்


*எழுத்தாளர் நா. பார்த்தசாரதி* 04


▼

### *பின் அட்டை ஓவியம்*

த. காயத்ரி
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை

# தேசியக்கொடி

இந்திய தேசியக் கொடி ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை பெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், 22 ஜூலை 1947 அன்று, தற்போதைய வடிவில், ஏற்கப்பட்டது. 26 ஜனவரி 1950 இல் இந்தியா குடியரசு நாடாக ஆகும் வரையிலும், அதன் பிறகும் இக்கொடி தேசியக் கொடியாக விளங்கி வருகிறது. இக்கொடி, 'மூவர்ண'க் கொடியாகவும் குறிப்பிடப் படுகிறது.

நீள்சதுர வடிவில் உள்ள இக்கொடியில், மேலிருந்து கீழாக, காவி, வெள்ளை, பச்சை ஆகிய மூன்று வண்ணங்கள் உண்டு. கொடியின் நடுவில், கடற்படை நீல வண்ண நிறத்தில் அசோகச் சக்கரம் என கூறப்படும் 24 கோல்களை கொண்ட சக்கரம் உண்டு. இச்சக்கரம் கொடியின் வெள்ளைப் பாகத்தின் உயரத்தில் நான்கில் மூன்று பாக உயரத்தை கொண்டது. கொடியின் முழு உயரம், முழு நீளத்தில் மூன்றில் இரண்டு பாகமாகும். இக்கொடி இந்தியப் போர்க் கொடியாகவும் விளங்கும்.

இந்திய தேசியக் கொடியை உருவாக்கியவர் பிங்கலி வெங்கையா. அரசியல் முறைப்படி, தேசியக் கொடியைக் கையால் நெய்த காதி துணியில் செய்ய வேண்டும். தேசியக் கொடியின் வெளிப்படுத்துதல், கையாள்தல் முறைகள், இந்திய கொடிச் சட்டத்தால் ஆளப்படுகிறது.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்னர், அப்போதைய பெரும் பான்மை கட்சியான இந்திய தேசிய காங்கிரஸ், 1931ஆம் ஆண்டு காவி, பச்சை, வெள்ளை ஆகிய மூன்று வண்ணங்களைக் கொண்ட கொடி யைத் தன் கொடியாக ஏற்றது. காவி நிறம் இந்துத்துவத்தையும், பச்சை நிறம் இஸ்லாமியத்தையும், வெள்ளை நிறம் ஏனைய பிற சமயங்களைக் குறிக்கும் வகையில் அமைந்தன.

சில சமயம், வெள்ளை நிறம், அயர்லாந்தின் கொடியைப் போல மூவண்ணக் கொடியில் உள்ள காவி நிறத்தையும் பச்சையும் குறிக்கும் இரு சமயங்களுக்கு நடுநிலை நிறமாக உணரப்பட்டது. 1930ஆம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸ், ஒரு சக்கரத்தைக் கொண்ட மூவண்ணக் கொடியைத் தன் கொடியாக ஏற்றது. ஆனால் இக்கொடி எச்சமயத்திற்கும்

பாகுபாடற்ற ஒரு கொடியாக பொருள் கொண்டது.
விடுதலைக்குச் சில நாட்களுக்கு முன்னர், ஒரு சிறப்புக் குழுமம், சில மாறுதல்களுக்கு உட்படுத்தப் பட்ட இந்திய தேசிய காங்கிரசின் மூவண்ணக் கொடியை இந்தியர்கள் அனைத்து சமூகத்தினரும் ஏற்கும் வகையில், இந்திய தேசிய கொடியாக ஏற்றது.

முன்னிருந்த சக்கரத்திற்கு பதிலாக, அசோக சக்கரம் இக்கொடியில் பயன்பாட்டுக்கு வந்தது. வெவ்வேறு சமயங்களை உணர்த் துவதாக இருந்த எண்ணத்தை மாற்ற, பின்னாளில் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக பதவி ஏற்ற சர்வப்பள்ளி இராதாகிருட்டிணன் அவர்கள் புதிதாக ஏற்கப்பட்ட இந்திய தேசியக் கொடியைப் பொருள் பட இவ்வாறு கூறினார்.


சாதுக்களின் நிறமான காவி நிறம், பொருளை துயிலுற குறிப்பதாகும். நம் தலைவர்கள், பொருள் சேர்ப்பதை துயிலுண்டு, வேலையின் காரணத்திற்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும். ஒளியை குறிக்கும் வகையில் நடுவில் உள்ள வெள்ளை நிறம், நம் நன்னடத்தையின் பாதைக்கு வழி காட்ட வேண்டும். பச்சை நிறம், நம் நிலத்திற்கு உள்ள உறவையும் அதிலிருந்து வளரும் செடிகளின் பாரமாக அமைந்த நம் வாழ்வையும் குறிக்கும். அசோக சக்கரமோ, கொடியின் கீழ் வேலையாற்றும் மக்களுக்கு நியாய தருவத்தின் அடிப்படையாக அமையும்.

சக்கரம், சுழலை குறிக்கும் வடிவமாக அமையும். நிற்கதியில் சாவு உண்டு, சுழலில் வாழ்வு உண்டு. இந்திய நாடானது, இனிமேலும் மாற்றங்களை எதிர்க்காமல், முன்னெறிச் செல்ல வேண்டும். இச்சக்கரமானது, அமைதியான மாற்றத்தை குறிக்கும் ஒரு சின்னமாக அமையும்.

பெரும்பான்மைக் கூற்றோ தேசியக் கொடியின் காவி நிறம், தூய்மையையும் கடவுளையும் குறிக்குமாறும், வெள்ளை நிறம் அமைதியையும் உண்மையையும் குறிக்குமாறும், பச்சை நிறம், புணர்ப்பையும், செம்மையையும் குறிக்குமாறு பொருள்படும்.

**தொகுப்பு:**

**சே. கற்பகராஜ்,**
**மூன்றாமாண்டு வணிகவியல் (கணினி).**



மாதம் ஒரு படைப்பாளர்

# நா. பார்த்தசாரதி

**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

நா.பார்த்தசாரதி (டிசம்பர் 18, 1932 - டிசம்பர் 13, 1987) புகழ் பெற்ற தமிழ் புதின (நாவல்) எழுத்தாளர் ஆவார்.

தீரன், அரவிந்தன், மணிவண்ணன், பொன்முடி, வளவன், கடலழகன், இளம்பூரணன், செங்குளம் வீரசிங்கக் கவிராயர் ஆகிய புனைப்பெயர்களிலும் அறியப்படும் இவர் தீபம் என்ற இலக்கிய இதழை நடத்தி வந்ததால் "தீபம்" நா.பார்த்தசாரதி என்றும் அழைக்கப் படுகிறார்.




பெரும்பாலும் இவருடைய கதைகள் சமகால சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போராடும் கொள்கைப் பிடிப்புள்ள கதைமாந்தர்களைப் பற்றியதாய் அமைந்துள்ளது.

இவருடைய புகழ் பெற்ற புதினங்களான 'குறிஞ்சி மலர்' மற்றும் பொன் விலங்கு தொலைக்காட்சித் தொடர்களாகவும் வந்துள்ளன. சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளார்.

தமிழ்நாடு, விருதுநகர் மாவட் டத்தில் உள்ள நதிக்குடி இவரது பிறந்த ஊர். சராசரி நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர்.

பாரதியார் ஆசிரியராய் இருந்த மதுரை சேதுபதிப் பள்ளியில் ஆசிரியராய் பணியாற்றினார். முறை யாகத் தமிழ் கற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து அந்தக் கால முறைப்படி இலக்கணச் சூத்திரங்களை மனப்பாடம் செய்து கல்வி கற்றவர்.

கல்கி இதழின் ஆசிரியர் சதாசிவத்தின் அழைப்பின் பேரில் அதன் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். கல்கியில் சேர்ந்து அவர் எழுதிய முதல் புதினம், குறிஞ்சி மலர்.

1965 இல் கல்கி இதழில் இருந்து விலகி சொந்தமாக தீபம் என்ற மாத இதழை ஆரம்பித்தார். ஆசிரியராகவும் நிர்வாகி யாகவும் இருந்து இருபத்து மூன்று ஆண்டுகள் அதை நடத்தினார். 1979இல் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிர்வாகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தினமணிக் கதிர் வார இதழுக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தினார். சாயங்கால மேகங்கள், நிசப்த சங்கீதம், ராணி மங்கம்மாள் போன்ற நாவல்களை தினமணிக் கதிரில் எழுதினார். கதிரிலிருந்து விலகிய பின் பத்திரிகை உலகத்தைப் பின்புலமாக வைத்து சுந்தரக் கனவுகள் என்கிற தலைப்பில் ஒரு புதினம் எழுதினார்.




**பயண இலக்கியம்**

பயணக் கட்டுரைகளுல் நா.பா. நிறைய எழுதினார். ருஷ்யா, இங்கிலாந்து, போலந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இத்தாலி, எகிப்து, குவைத் போன்ற பல நாடுகளுக்குச் சென்று அவர் எழுதிய பயணக் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

**புதினங்கள்**

1.சாயங்கால மேகங்கள்
2.மணிபல்லவம்
3.ஆன்மாவின் ராகங்கள்
4.குறிஞ்சி மலர்
5.பொன் விலங்கு
6.சாயங்கால மேகங்கள்
7.நிசப்த சங்கீதம்
8.ராணி மங்கம்மாள்
9.சமுதாய வீதி
10.துளசி மாடம்
11.பாண்டிமாதேவி
12.நித்திலவல்லி
13.வஞ்சிமாநகரம்
14.சத்தியவெள்ளம்
15.வெற்றி முழக்கம்

**விருதுகள்**

சாகித்ய அகாதமி பரிசு (சமுதாய வீதி), ராஜா சர் அண்ணாமலை பரிசு (துளசி மாடம்), தமிழ்நாடு பரிசு போன்ற பல பரிசுகளும் விருதுகளும் பெற்றிருக்கிறார்.

**மறைவு**

நாற்பத்தைந்து வயதிற்குமேல் எம்.ஏ. படித்துத் தேறி, டாக்டர் பட்டத்திற்குப் பதிவு செய்துகொண்டார். ***"பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்"*** என்ற தலைப்பில் ஆய்வேட்டினைச் சமர்ப்பித்தார். ஆனால், டாக்டர் பட்டம் கிடைக்க இரண்டே நாட்கள் இருந்த நிலையில் இதய நோய்க்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுக் காலமானார்.

# தோழர் ஜீவா



நாகர்கோயிலை அடுத்த பூதப் பாண்டி என்ற ஊரில் கிராமத்தில் 1907ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் தேதி, பட்டத்தார் - உமையம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இட்டபெயர் சொரிமுத்து. ஐயனார் என்ற கிராம தெய்வத்தின் பெயர்தான் சொரிமுத்து.

இளம் வயதில் அவரைக் கவர்ந்தது மகாத்மா காந்தியின் கொள்கைகள். அந்த நாளில் நாடகம் நடத்திவந்த அஞ்சாநெஞ்சன் விஸ்வநாத தாஸ் என்பவரோடு ஜீவா நெருங்கிப் பழகினார். சில நாடகங்களையும் அவருக்காக எழுதிக் கொடுத்தார். நாடகம் எழுதித் தயாரிக்கும் ஆற்றலுடன் ஒன்பதாவது படிக்கும்போதே முதல் கவிதையை எழுதினார். பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது 'சுகுணராஜன் அல்லது சுதந்தரவீரன்' என்ற நாவலை எழுதினார். 'ஞான பாஸ்கரன்' என்ற நாடகத்தை அவரே எழுதித் தயாரித்து அரங்கேற்றினார். அந்த நாடகத்தில் நடிக்கவும் செய்தார். காந்திய வெளியீடுகளைப் படித்தார்.

காந்தியிடமிருந்து ஒத்துழை யாமை இயக்க அழைப்பு வந்தது. காந்திஜியின் கட்டளைப்படி அன்னியத் துணிகள் அணிவதை ஒழித்தல் என்ற திட்டத்தின் கீழ், திட்டுவிளை கிராமத்தில் தேசபக்தர் திருகூடசுந்தரம் பிள்ளையின் அன்னியத் துணி எதிர்ப்புப் பிராசாரக் கூட்டம் நடைபெற்றது. அவருடைய பேச்சு ஜீவாவைக் கவர்ந்தது. அது முதல் அவர் கதர் அணியத் தொடங்கினார்.

பகத் சிங் தூக்கிலிடப்பட்ட காலம் அது. வன்முறையில் நம்பிக்கையற்ற வராயிருப்பினும் பகத் சிங்குக்கு அளிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை அவரால் ஏற்க முடியவில்லை. ஜீவா சீறி எழுந்தார். அனல் கக்கும் அவர்

பேச்சு இளைஞர்களைக் கவர்ந்தது. சிறையிலிருந்து பகத் சிங் தன் தந்தைக்கு எழுதிய 'நான் ஏன் நாத்திகனானேன்?' என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார் ஜீவா.

ஈ.வெ.ரா. பெரியார் அதை வெளியிட்டார். அதற்காக ஜீவாவைக் கைதுசெய்து, கை - கால்களில் சங்கிலியிட்டு வீதி வீதியாக இழுத்துச் சென்று திருச்சி சிறையில் அடைத்தனர். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஜீவா முழுக்க முழுக்க சோசலிசக் கொள்கையால் ஈர்க்கப் பட்டார்.

ஜீவாவின் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை அவரது ஊர் மக்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. மகன் போக்கிற்கு தந்தையை எதிர்த்தனர். ஜீவாவின் சார்பில் தந்தை மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அதற்கு ஜீவா ஒப்புதல் தரவில்லை. இருவருக்கு மிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தன் கொள்கையைத் துறக்க ஜீவா இசையவில்லை. இறுதியில் அவர் குடும்பத்தைத் துறந்து வீட்டை விட்டு வெளியேறினார். அப்போது அவருக்கு வயது 17.

வ.வே.சு. ஐயர் நடத்திய தேசிய குருகுலத்தில் இளம் வயதிலேயே ஜீவானந்தம் ஆசிரியர் பணி ஏற்றிருந்தார். ஐயரின் தீண்டாமைக் கொள்கையை ஏற்கவில்லை. அந்த ஆசிரமம் மூடப்பட்ட பிறகு காரைக்குடிக்கு அருகில், சிராவயல் என்ற ஊரில் காந்தி ஆசிரமத்தை உருவாக்கினார்.

கடலூர் சட்டமன்றத் தொகுதி ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ. மகள் கண்ணம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால், அந்த அம்மையார் குமுதா என்ற பெண் மகவைப் பெற்றெடுத்த சில நாள்களில் காலமானார். அதன்பிறகு 1948ஆம் ஆண்டு பத்மாவதி என்னும் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்துகொண்டார். உஷா, உமா என்ற இரு பெண் குழந்தைகளும் மணிக்குமார் என்ற மகனும் பிறந்தனர்.

ஜீவாவின் இறுதிக்காலச் செயல்பாடுகளில் முதன்மையாகக் கருதத்தக்கது 1962ஆம் ஆண்டு அவர் உருவாக்கிய 'கலை இலக்கியப் பெருமன்றம்' ஆகும்.

கொள்கையைப் பரப்ப 'ஜனசக்தி' நாளிதழைத் தொடங்கிய

ஜீவா, 'தாமரை' என்ற இலக்கிய இதழை 1959 இல் தொடங்கினார். அதில், பொதுவுடமைக் கொள்கைக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் 'தமிழ் மணம் பரப்ப' என்று பாராட்டி கவிதைகள் எழுதினார். 1933 இல் ஜீவா எழுதிய 'பெண்ணுரிமை கீதாஞ்சலி' என்ற கவிதை நூல் வெளிவந்தது. இதுதான் ஜீவா எழுதிய முதல் நூல்.

அன்றுமுதல் இந்திய நாடு விடுதலை அடையும்வரை பல்வேறு சூழ்நிலை களில் தொழிலாளர்கள் போராட்டங் களில் ஜீவா எழுதிய பாடல்கள், தொழிலாளர்களை எழுச்சி பெறச் செய்தன.

ஜீவா பொதுவுடமைவாதியாகச் செயல்படுவதற்கு அடிப்படையாக அமைந்த காலச்சூழல் 1935-39 ஆகும். இக்காலங்களில்தான் 'ஜனசக்தி' இதழ் உருவாக்கப்பட்டது (1937).

'தொழிலாளர் பாதுகாப்புக் கழகம்' எனும் பெயரில் கம்யூனிஸ்டுகள் உருவாக்கிய அமைப்பின் மூலம் பல்வேறு தொழிற்சங்க அமைப்புகள் உருவாயின. இவற்றின் மூலம் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக் காகப் போராடினர். இரண்டாம் உலகப்போர் உருவா வதற்கான 'பெரும் அழுத்தம்' உருவாகும் சூழலில் கம்யூனிஸ்டுகளால் முன்னெடுக்கப்பட்ட தொழிலாளர், விவசாய இயக்கங்களின் எழுச்சி பிரித்தானிய அரசு எந்திரத்தைத் தூக்கியெறிவதற்கான அடிப் படைகளை உருவாக்கிற்று. இதனை அடி மட்டத்தில் சாத்தியப் படுத்தியவர்களாகக் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள்.

ஜீவா 1930களில் தன்னை சுயமரியாதை இயக்கத்தவனாகவும் அடையாளப்படுத்திக் கொண்டார். இந்தியக் காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு 1932 இல் சிறையில் அடைக்கப்பட்டார். மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட் தோழர்கள் பலர் சிறையில் இருந்தனர். சிறை ஜீவாவின் சிந்தனைப்போக்குகளை மாற்றியது. 'சிறையிலிருந்து நான் வெளிவரும்போது, கம்யூனிசக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டவ னாகவே வெளியே வந்தேன்' என்று ஜீவா எழுதுகிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பதவி வகித்த ஜீவா, சீனப்

படையெடுப்பை எதிர்த்துக் கடும் பிரசாரம் செய்தார். சீன சோஷலிச அரசு இந்தியாவில் ஆக்கிரமிப்பு செய்ததை ஜீவா ஏற்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கவுன்சிலில் தீர்மானம் நிறை வேற்றுவதில் ஜீவா முக்கிய பங்கேற்றார்.

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட காலங்களில் (1939-42) பம்பாயிலும் சிறையிலும் தனது பெரும்பகுதியான நாள்களை ஜீவா கழித்தார். இக்காலங்களில், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியிலிருந்து கம்யூ னிஸ்ட் இயக்கத்தைக் கட்டு வதற்கான செயல்பாடுகளில் தோழர் களோடு இணைந்து தீவிரமாகச் செயல்பட்டார். 1948 இல் கம்யூனிஸ்ட் கட்சித்தடை செய்யப்பட்டபோது இலங்கைக்குச் சென்று செயல்பட்டார். இக்காலங்களில் மார்க்சியக் கல்வி பயிலுவதை முதன்மைப்படுத்திக் கொண்டார். சோசலிசச் சரித்திரம், சோசலிசத் தத்துவம் சார்ந்த மூல நூல்களை வாசித்த அனுபவம் சார்ந்து, தமிழில் அப்பொருண்மை குறித்து எழுதினார்.

மார்க்சிய கருத்துகளைத் தமிழில் சொல்வதற்கு ஜீவா பல புதிய சொல்லாட்சிகளை உருவாக்கியுள்ளார். 1940 களின் இறுதி ஐம்பதுகளின் தொடக்கத்தில் ஜீவா எழுதிய 'சோசலிசச் சரித்திரம்' மற்றும் 'சோசலிசத் தத்துவம்' எனும் சிறு நூல்களைத் தொடர்ந்து அத்துறை சார்ந்த சோவியத் நூல்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி, மற்றும் அதன் தொழிலாளர் பாதுகாப்புக் கழகம், சுயமரியாதை சமதர்மக்கட்சி ஆகியவற்றில் தலைமைப் பொறுப்பேற்க வேண்டிய சூழல் ஜீவாவிற்கு உருவானது. 'சமதர்மம்', 'அறிவு', 'ஜனசக்தி' ஆகிய இதழ்களின் ஆசிரியர் பொறுப்பையும் இக்காலங்களில் ஏற்றிருந்தார்.

ஈ.வெ.ராவோடு கருத்துமுரண் ஏற்பட்ட சூழலில் தோழர்கள் அ. ராகவன், நீலாவதி, இராமநாதன் உள்ளிட்டவர்களோடு இணைந்து 'சுயமரியாதைச் சமதர்மக் கட்சி'யை உருவாக்கினார். அவ்வியக்கத்தின் இதழ்களாகவே 'சமதர்மம்' மற்றும் 'அறிவு' ஆகியவை செயல்பட்டன. அக்கட்சியின் முதல் மாநாடு திருச்சியில் நடைபெற்றது (1936), டாங்கே அம்மாநாட்டின் தலைமை யுரையை நிகழ்த்தினார். இவ் வகையில் காங்கிரசிலிருந்து

வெளியே வந்து, சோசலிசக் கருத்தாக்கம் சார்ந்த சுயமரியாதை இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று ஜீவா விரும்பினார். இதற்கு முரணாக ஈ.வெ.ரா. செயல்படுவதாகக் கருதினார். குறிப்பாக அக்காலங்களில் நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சியுடன் ஈ.வெ.ரா. கொண்டிருந்த தொடர்பை, ஜீவா ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு எதிராகச் செயல்பட்டு காங்கிரஸ் தேர்தலில் வெற்றிபெற காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்காரராகச் செயல் பட்டார். இந்தப் பின்புலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் பெயரில் ஜனசக்தியை வார இதழாக வெளிக்கொண்டு வந்தது (1937).

**ஜீவாவின் நூல்கள்**

மதமும் மனித வாழ்வும், சோஷலிஸ்ட் தத்துவங்கள், புதுமைப் பெண், இலக்கியச்சுவை, சங்க இலக்கியத்தில் சமுதாயக் காட்சிகள், ஜீவாவின் பாடல்கள் தொகுப்பு, மேடையில் ஜீவா (தொகுப்பு), சோவியத் இலக்கியம் பற்றி ஜீவா, கலை இலக்கியத்தின் புதிய பார்வை தேசத்தின் சொத்து (தொகுப்பு).

**மணி மண்டபம்**

தமிழ்நாடு அரசு ப.ஜீவானந்தம் நினைவைப் போற்றும் வகையில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர் கோயிலில் பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம் அமைத்துள்ளது. இங்குப் ப.ஜீவா னந்தம் மார்பளவு சிலை அமைக்கப் பட்டுள்ளது. அவரது வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

**ஆகஸ்ட் 21ஆம் நாள் தோழர் ஜீவாவின் பிறந்தநாள் ஆகும்.**

**தொகுப்பு:**

**எஸ்.சரத்குமார்,**
இரண்டாமாண்டு நுண்ணுயிரியல் துறை.

## மனிதக் கணக்கு

**மனிதன் + தன்னம்பிக்கை = வெற்றி**
**மனிதன் + கவலை = கண்ணீர்**
**மனிதன் + ஆனந்தம் = புன்னகை**
**மனிதன் + இயலாமை = கோபம்**
**மனிதன் + அன்பு = காதல்**
**மனிதன் + ஆசை = காமம்**
**மனிதன் - தன்னம்பிக்கை = தோல்வி**
**மனிதன் - கவலை = உற்சாகம்**
**மனிதன் - ஆனந்தம் = சோம்பல்**
**மனிதன் - இயலாமை = முயற்சி**
**மனிதன் - அன்பு = விரோதம்**
**மனிதன் - ஆசை = அமைதி**

**பி. சரண்யா**
முதலாண்டு ஆங்கிலத் துறை.

# திரு.வி.க.

காஞ்சிபுரம் மாவட்டத்துச் சைதாப் பேட்டை வட்டத்துத் துள்ளம் என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார் - சின்னம்மா தம்பதிகளுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார். இவரின் முன்னோர்கள் சோழ நாட்டில் திருவாரூர் என்ற ஊரைச் சேர்ந்த வர்கள்.

கல்யாணசுந்தரனாரின் தந்தை இலக்கியப் பயிற்சியும் இசைப் பயிற்சியும் உடையவர். ஆசிரியத் தொழிலுடன் வணிகமும் புரிந்தவர். இவர் பச்சையம்மாள் என்பவரை மணந்து மூன்று ஆண்களையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றார். இவ்வம்மையார் இறந்த பின்னர் சின்னம்மாள் என்பாரை மணந்து நான்கு ஆண் மக்களையும் நான்கு பெண் மக்களையும் பெற்றார். இவர்களுள் ஒருவரே கல்யாணசுந்தரனார்.

**கல்வி**

தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னையில் இராயப்பேட்டையில் தங்கி ஆரியன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். அதன் பின்னர், 1894 இல் வெஸ்லி பள்ளியீல் நான்காம் வகுப்பில் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஒரு காலும் ஒரு கையும் மூடங்கின. இதனால் பள்ளிப் படிப்பு சிறிது காலம் தடைப்பட்டது. படிப்பில் நல்ல திறமையுடையவராக விளங்கினார். 1904 ஆம் ஆண்டில் ஆறாம் படிவத் தேர்வு எழுத முடியாமல் போனது. அத்தோடு அவரது பள்ளிப் படிப்பும் முடிந்தது.

**தமிழ்க் கல்வி**

வெஸ்லி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை என்ற தமிழறிஞரிடம் நட்பு ஏற்பட்டது. அவரிடம் தமிழ் பயிலத் தொடங்கினார். அவரிடம் தமிழ் நூல்களை முறையாகப் பயின்று சிறந்த புலமை பெற்றார். கதிரைவேற்பிள்ளை நீலகிரிக்குச் சென்ற பொழுது அங்குக் காலமானார். அதன் பின்னர் கல்யாணசுந்தரனார் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ், மற்றும் சைவ நூல்களையும் பாடம் கேட்டார்.

**ஆசிரியப் பணி**

1906 ஆம் ஆண்டில் ஸ்பென்சர் தொழிலகம் என்ற ஆங்கில நிறுவனத்தில் கணக்கர் ஆகச் சேர்ந்தார். அக்காலத்தில், பால கங்காதர திலகர் போன்றோரின்

விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டதனால் அவ்வேலையிலிருந்தும் அவர் நீங்கினார். பின்னர் 1909 இல் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து ஆறு ஆண்டுகள் பணி புரிந்தார். அப்போது அவருக்குத் திருமணம் நடந்தது. அவருக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்தனர். 1918 ஆம் ஆண்டிற்குள் தம் மனைவி, பிள்ளைகளை இழந்து மீண்டும் தனியரானார். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். நாட்டிற்கு உழைப்பதற்காக அவர் அப்பணியில் இருந்து விலகினார்.

**பத்திரிகைப் பணி**

தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பீன்னர் திராவிடன், நவசக்தி போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்து நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றினார்.

**அரசியல் பணி**

தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதினார்.

1.யாழ்ப்பாணம் தந்த சிவஞானதீபம், நா.கதிரைவேற்பிள்ளை சரித்திரம் - 1908
2. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - 1921
3.பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை - 1927
4.நாயன்மார் வரலாறு - 1937
5.முடியா? காதலா? சீர்திருத்தமா? - 1938
6.உள்ளொளி - 1942
7.திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 1 - 1944
8.திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 2 - 1944
9.உரை நூல்கள்
10.பெரிய புராணம் குறிப்புரையும் வசனமும் - 1907
11.பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும் - 1923
12.காரைக்கால் அம்மையார் திருமுறை - குறிப்புரை - 1941
13.திருக்குறள் - விரிவுரை (பாயிரம்) - 1939
14.திருக்குறள் - விரிவுரை (இல்லறவியல்) 1941
15.தேசபக்தாமிர்தம் - 1919
16.என் கடன் பணி செய்து கிடப்பதே - 1921
17.தமிழ்நாட்டுச் செல்வம் - 1924

18.தமிழ்த்தென்றல் (அல்லது) தலைமைப்பொழிவு - 1928
19.சீர்திருத்தம் (அல்லது) இளமை விருந்து - 1930
20.தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 1 - 1935
21.தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 2 - 1935
22.இந்தியாவும் விடுதலையும் - 1940
23.தமிழ்க்கலை - 1953
24.சைவசமய சாரம் - 1921
25.நாயன்மார் திறம் - 1922
26.தமிழ்நாடும் நம்மாழ்வாரும் - 1923
27.சைவத்தின் சமசரசம் - 1925
28.முருகன் (அல்லது) அழகு - 1925
29.கடவுட் காட்சியும் தாயுமானவரும்
30.இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
31.தமிழ் நூல்களில் பௌத்தம் - 1929
32.சைவத் திறவு - 1929
33.நினைப்பவர் மனம் - 1930
34.இமயமலை (அல்லது) தியானம்
35.சமரச சன்மார்க்க போதமும் திறவும்
36.சமரச தீபம் - 1934
37.சித்தமார்கக்ம - 1935
38.ஆலமும் அமுதமும் - 1944
39.பரம்பொருள் (அல்லது) வாழ்க்கை வழி - 1949
40.உரிமைவேட்கை (அல்லது) நாட்டுப்பாடல் - 1931
41.முருகன் அருள் வேட்டல் - 1932
42.திருமால் அருள் வேட்டல் - 1938
43.பொதுமை வேட்டல் - 1942
44.கிறிஸ்துவின் அருள் வேட்டல் - 1945
45.புதுமை வேட்டல் - 1945
46.சிவனருள் வேட்டல் - 1947
47.கிறிஸ்து மொழிக்குறள் - 1948
48.இருளில் ஒளி - 1950
49.இருமையும் ஒருமையும் - 1950
50.அருகன் அருகே (அல்லது) விடுதலை வழி - 1951
51.பொருளும் அருளும் (அல்லது) மார்க்ஸியமும் காந்தியமும் - 1951
52.சித்தந் திருத்தல் (அல்லது) செத்துப் பிறத்தல் - 1951
53.முதுமை உளறல் - 1951
54.வளர்ச்சியும் வாழ்வும் (அல்லது) படுக்கைப் பிதற்றல் - 1953
55.இன்பவாழ்வு - 1925

**ஆகஸ்ட் 26ஆம் நாள் திரு.வி.க.வின் பிறந்தநாள் ஆகும்.**

**தொகுப்பு:**

**ஜி.வெங்கடேசன்,**

இரண்டாமாண்டு உயிர் வேதியியல்துறை

ஐ

# பார்பாய்ஸ்

பார்பாய்ஸ் என்ற பிராணி கடலில் வாழக்கூடியது. இது சீட்டோசியா வரிசையைச் சார்ந்தது.

இது வெளித்தோற்றத்தில் மீன் களைப் போல் காணப்பட்டாலும், நீரில் வாழத் தகவமைப்பினையும் கொண் டுள்ளதாலும் இதனை மீன் வகையில் சேர்க்க இயலாது. இது நுரையீரல் வழியாகச் சுவாசிக்கின்றது.

இது பாலூட்டி வகையைச் சார்ந்ததாகும். இவை மனிதனின் ஒலிப்பு முறையைப் போலவே ஒலி எழுப்பிப் பேசுகின்றன.

இவற்றின் வாயில் 80 முதல் 100 வரையிலான எண்ணிக்கையில் பற்கள் உள்ளன.

இவற்றின் உடல் 1.5 மீட்டர் நீளம் கொண்டவை. இவை மீன்களையே உணவாக உட்கொள்கின்றன. இவற்றின் இரைப்பையில் நான்கு அறைகள் உள்ளன.

இவை பசிபிக் மற்றும் அட்லாண்டிக் சமுத்திரங்களில் அதிக அளவில் பெருகியுள்ளன.

இவற்றின் தலையிலிருந்தும் தாடை களிலிருந்தும் எண்ணெய் எடுக்கப் படுகின்றன. இவ் எண்ணெய் கடிகாரத்தின் பாகங்களையும் விலை உயர்ந்த கருவிகளையும் பதப்படுத்தப் பயன்படுகின்றது.


**பி.தீபா**

முதலாண்டு வேதியியல் துறை.


# நீங்கள் விரும்பினால்

**விழுங்க விரும்பினால் -**

கோபத்தையும் துக்கத்தையும் விழுங்குங்கள்.

**உடுக்க விரும்பினால் -**

உயர்வையும் உண்மையையும் உடுத்திக்கொள்ளுங்கள்.

**கொடுக்க விரும்பினால் -**

பிறருக்கு நலம் தருவதையே கொடுங்கள்.

**வாங்க விரும்பினால் -**

ஆதரவற்றோரின் ஆசிகளை வாங்குங்கள்.

**வீழ்த்த விரும்பினால் -**

மன இச்சைகளை வீழ்த்துங்கள்.


நீங்கள் விரும்பினால் இவற்றை விரும்பிச் செய்யுங்கள்.


**பி. சரண்யா**

முதலாண்டு ஆங்கிலத் துறை.

# குன்றக்குடி அடிகளார்

தமிழ்நாடு தஞ்சாவூரில் மயிலாடு துறையை அடுத்துள்ள திருவாளப் புத்தூருக்கு அருகிலுள்ள நடுத்திட்டு என்னும் சிற்றூரில் சீனிவாசப் பிள்ளை - சொர்ணத்தம்மாள் தம்பதிக்குக் குன்றக்குடி அடிகளார் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அரங்கநாதன். அவருக்கு முந்திப் பிறந்த சகோதரர் இருவர் சகோதரி ஒருவர்.



அப்போது அவர், நான்காம் வகுப்பு பயிலும் சிறுவன். வழக்கறிஞரும், தமிழ்ப் பேராசிரியருமான ரா. பி. சேதுப்பிள்ளையின் வீட்டில், அவரது அறை யின் ஜன்னல் முன் நின்று தினம் ஒரு திருக்குறள் ஒப்பித்துக் காலணா பெறுவது அரங்கநாதனின் வழக்கம். இவ்வாறு அரங்கநாதனின் வாழ்வை உயர்த்திய திருக்குறள், பின்னாளில் அடிகளாரான அவருக்குப் பொதுநெறி ஆகியது. இதேபோல, அரங்கநாதனின் பிஞ்சு உள்ளத்தில் தீண்டாமை விலக்கு உணர்வும், மனிதநேயப் பண்பும் குறிக்கோள்களாகப் பதியக் காரணமானவர் விபுலானந்த அடிகள் ஆவார்.

பள்ளி இறுதி வகுப்புவரை படித்த அரங்கநாதன், தருமபுர ஆதீனத்தில் கணக்கர் வேலை இருப்பதை அறிந்து 1944 ஆம் ஆண்டு அப்பணியில் சேர்ந்தார். 1945-48 கால இடைவெளியில் முறைப்படி தமிழ் கற்று வித்துவான் ஆனதும் அங்கேதான். அத் திருமடத்தின் 25ஆவது பட்டமாக வீற்றிருந்த தவத்திரு சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அரங்கநாதனைத் துறவுக்கு ஆட்படுத்திக் கந்தசாமித் தம்பிரான் ஆக்கினார்கள்.

1945ஆம் ஆண்டு தருமபுர ஆதீனத்தின் கட்டளைத் தம்பிரானாக நியமனம் பெற்ற கந்தசாமித் தம்பிரான், சமயம் தொடர்பான பல பணிகளைத் திறம்பட ஆற்றினார். அவர் தருமையாதீனத்தின் சார்பில், குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீன குருபூஜை விழாவொன்றில் பங்கேற்றுச் சொற்பொழிவாற்ற நேர்ந்தது. கந்தசாமித் தம்பிரானின் நாவன்மையால் கவரப்பட்ட குன்றக் குடித் திருமட ஆதீனகர்த்தர் திருப்பெருந்திரு ஆறுமுக தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் முறைப்படி

தருமையாதீனத்திடம் இசைவுபெற்றுத் தமது திருமடத்துக்கு ஆதீன இளவரசராகக் கந்தசாமித் தம்பிரானை ஆக்கினார்.

அப்போது, தெய்வசிகாமணி ***'அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்'*** என்ற திருப்பெயரும் அவருக்குச் சூட்டப்பட்டது.

1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 இல் ஆதீன இளவரசராகிய அவர், 1952 ஜூன் 16 ஆம் தேதி முதல் அத்திருமடத்தின் தலைமைப் பொறுப் பேற்று, 45ஆவது குருமகா சந்நிதானமாக விளங்கினார். பின்னர் தம் பணிகளால், அடிகளார் ஆகி, ஊர்ப்பெயர் இணைய, குன்றக்குடி அடிகளார் என்று மக்களால் சிறப்புடன் அழைக்கப்பட்டார். அடிகளார் ஆதீனப் பொறுப்பேற்ற காலம், இந்து மதத்திற்கு மிகவும் சோதனையான காலம். இறைமறுப்புப் பிரசாரங்களால் தாக்கு தலுக்கும், கண்டனத்துக்கும் உரியதாக இந்து மதம் ஆயிற்று. இதன் எதிர்கால விபரீதங்களை மனதில் எண்ணிய அடிகளார், காலத்திற்கேற்ப, இந்து மதத்தின் உன்னத சீலங்களைப் புரியவைக்கும் முயற்சியில் இறங்கினார்.

இதன் பொருட்டு 1952 ஆகஸ்ட் 11 ஆம் நாள் சமயச் சான்றோர்களையும், பெருந் தமிழறிஞர்களையும் குன்றக் குடியில் ஒன்றுதிரட்டிப் பெரும் மாநாடு ஒன்றை நடத்தினார். அதன்விளைவாகத் தோன்றியதே "அருள்நெறித் திருக்கூட்டம்".

1954 ஜூலை 10 ஆம் நாள் இதன் முதல் மாநாடு தேவ கோட்டையில் மூதறிஞர் இராஜாஜி தலைமையில் நடை பெற்றது. பின்னர் முழு வீச்சோடு செயல்பட்ட இவ்வியக்கத்தின் கிளைகள் தமிழகம் மட்டுமல்லாது, இலங்கை யிலும் கிளைத்தன. அதன் செயலாக்கப்பிரிவாக "அருள்நெறித் திருப்பணி மன்றம்" எனும் அமைப்பும் 1955 ஜூன் 10 ஆம் நாள் கிளைத்தது. அப்போதைய தமிழக அரசின் துணையோடு தமிழ்நாடு "தெய்வீகப் பேரவை" எனும் அமைப்பு, 1966 இல் ஆரம்பிக்கப்பட்டது. தருமை ஆதீன குருமகா சந்நிதானம் தலைமை யேற்ற இப்பேரவையில் அவருக்குப் பின், 1969 முதல் 1976 வரை அடிகளார் தலைமையேற்று அரும் பணிகள் பல ஆற்றினார்.

வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்தார் அடிகளார். அவர் மேற்கொண்ட அந்த மேலைநாட்டுப் பயணங்கள், அவரைத் தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதுவராகவும்,

அங்குள்ள தமிழ் மக்களின் வளர்ச்சிக்குத் துணைபுரிபவராகவும் ஆக்கின. இவ்வாறு, அவர் 1972 இல் சோவியத் ஒன்றியத்தில் மேற்கொண்ட பயணத்தின் விளைவாக தோன்றியது தான் ‘குன்றக்குடி கிராமத்திட்டம்’.

பேச்சுக்கு நிகராக, எழுத்திலும் வல்லவரான அடிகளார், தம் வாழ்நாளில் ஏராளமான நூல்களை எழுதியதோடு, மணிமொழி, தமிழகம், அருளோசை முதலிய இதழ்களையும் நடத்தினார். அவர் ஆரம்பித்து, இன்றளவும் வந்துகொண்டிருக்கும் மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் ஆகிய இதழ்களும் குறிப்பிடத்தக்கன.

**அடிகளார் எழுதிய நூல்கள்**

1.அப்பர் விருந்து
2.அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்
3.திருவாசகத்தேன்
4.தமிழமுது
5.சமய இலக்கியங்கள்
6.நாயன்மார் அடிச்சுவட்டில்
7.ஆலய சமுதாய மையங்கள் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது)
8.நமது நிலையில் சமயம் சமுதாயம்
9.திருவருட்சிந்தனை
10.தினசரி தியான நூல்
11.திருவள்ளுவர்
12.திருவள்ளுவர் காட்டும் அரசியல்
13.திருவள்ளுவர் காட்டும் அரசு
14.குறட்செல்வம்
15.வாக்காளர்களுக்கு வள்ளுவர் தொடர்பான அறிவுரை
16.திருக்குறள் பேசுகிறது
17.குறள்நூறு
18.சிலம்பு நெறி
19.கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்
20.பாரதி யுகசந்தி
21.பாரதிதாசனின் உலகம்
22.கவியரங்கில் அடிகளார் (கவிதைகள்)
23.மண்ணும் மனிதர்களும் (தன்வரலாறு)

அடிகளார் எழுதிய சிறுகதைகள், அறிவொளி இயக்கத்தின் மூலமாக மக்களைச் சென்றெய்தியது. சில நாடகங்களும் அடிகளாரால் எழுதப்பெற்று அரங்கேறியுள்ளன. அவரது இறுதிக்காலத்தில் தினமணி யில் எங்கே போகிறோம்? என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதி வந்தார்.

**ஆகஸ்ட் 15ஆம் நாள் குன்றக்குடி அடிகளாரின் பிறந்தநாள் ஆகும்.**

**தொகுப்பு: கே. இளையவன்,**
இரண்டாமாண்டு
உயிர்த்தொழில் நுட்பத்துறை

## காபி X புற்றுநோய்

அமெரிக்காவின் ஹார்வர்டு ஸ்கூல் ஆப் பப்ளிக் ஹெல்த் ஊட்டச்சத்து மற்றும் நோய் இயல்துறைப் பேராசிரியர் எட்வர்டு ஜியோவன்னுசி தலைமையிலான குழு புற்றுநோய் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டது. 67,470 நபர்களிடம் ஆய்வு நடத்தி, புற்றுநோய்க்கும் காப்பிக்கும் உள்ள எதிர்த்தொடர்பைக் கண்டறிந்தனர்.

இந்த ஆய்வின் வழியாகத் தினமும் நான்கு கப் காப்பி அருந்துபவர்களுக்குப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு 25 சதவிகிதமும் தினமும் இரண்டு அல்லது மூன்று கப் காபி அருந்துபவர்களுக்கு ஏழு சதவிகிதமும் குறைந்திருந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. காபின் என்ற பொருள் நீக்கப்பட்ட காபியை அருந்துபவர்களுக்குப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு 22 சதவிகிதம் குறைந்திருந்தது தெரியவந்தது.

ஆக, கலப்படமில்லாத காப்பியை அருந்திப் புற்றுநோய் ஏற்படுவதனை ஓரளவிற்குத் தடுக்கலாம்.

**பா.ஜோதிமணி**
முதலாண்டு வேதியியல் துறை

## கிருபானந்த வாரியார்



இவரது இயற்பெயர் கிருபானந்த வாரி. தமிழ் நாட்டின் வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடிக்கு அருகில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள காங்கேயநல்லூர் என்னும் சிற்றூரில் மல்லையதாசருக்கும், மாதுஸ்ரீ கனகவல்லி அம்மையாருக்கும் பிறந்த பதினொரு பிள்ளைகளில் நான்காவது மகவாகப் பிறந்தார். செங்குந்த வீர சைவ மரபினர். ஐந்தாவது வயதில் திருவண்ணாமலையில் வீர சைவ குல முறைப்படி பாணிபாத்திர தேவர் மடத்தில் சிவலிங்க தாரணம் செய்விக்கப்பெற்றார். வாரியார் சுவாமிகள் அமிர்த லட்சுமியைத் தனது 19ஆவது வயதில் திருமணம் புரிந்தார்.

## இயல், இசைக் கல்வி

இவரது தந்தையார் இசையிலும் இயலிலும் வல்லவர், மாபெரும் புராண வல்லுநர். தந்தையாரே வாரியாருக்கு கல்வி, இசை, இலக்கிய, இலக்கணங் களைக் கற்றுத் தந்தார். எட்டு வயதிலேயே கவிபாடும் ஆற்றலைப் பெற்றவர். 12 வயதிலேயே பதினாயிரம் பண்களை மனப்பாடம் செய்தவர். பதினெட்டு வயதிலேயே சிறப்பாகச் சொற் பொழிவாற்றும் ஆற்றலு டையவராய் விளங்கினார். இவர் இயற்றியுள்ள வெண்பாக்கள் ஆயிரத் துக்கும் மேல் இருக்கும்.

வாரியாருக்கு 23 வயதானபோது, சென்னை ஆனைகவுனி தென்மடம் பிரம்மஸ்ரீ வரதாசாரியாரிடம் ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் வீணைப் பயிற்சி பெற்றார்.

## சொற்பொழிவு ஆற்றல்

தனது சங்கீத ஞானத்தால் அவர் கதாகாலட்சேபம் செய்யும் பொழுது திருப்புகழ், தேவாரம், திருவாசகம் முதலான தோத்திரப்பாக்களை இன்னிசையுடன் பாடினார். அவருடைய சங்கீத ஞானத்தைப் பாராட்டி, சென்னைத் தமிழிசை மன்ற வெள்ளி விழாவின் போது 'இசைப் பேரறிஞர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தன் தந்தையின் வழியில் வாரியார் சுவாமிகள் தமது 15ஆம் வயதிலிருந்தே சொற்பொழிவு செய்யும் திறம் உடையவரானார். 19-ஆம் வயதிலிருந்தே தனியாகப் புராணப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினார். அவருடைய பிரசங் கங்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கை ஒட்டியே அமைந்திருந்த காரணத்தால், பாமர மக்களது உள்ளம் கவர்ந்தவரானார். அவரது 'ஆன்மிக மொழி' பாமரர்களுக்கும் புரியும் விதமாக வேதாந்த உண்மைகளையும் சிந்தாந்தக் கருத்துகளையும் கூறியது. சுவாமிகள் தமிழோடு சைவ சித்தாந்தத்திலும் பெரும் புலமை பெற்றவர்.

அவருடைய சொற்பொழிவுகள் அநேகமாக நாடக பாணியில் இருக்கும். இடையிடையே குட்டிக் கதைகள் வரும். நகைச்சுவையும் நடைமுறைச் செய்திகளையும் நயம்படச் சொல்வதும் இவருக்குரிய சிறப்பியல்புகளாகும்.

## திருப்புகழ் அமிர்தம்

சுவாமிகள் 1936ஆம் ஆண்டு தைப்பூச விழாவுக்கு வடலூர் சென்றிருந்த சமயம், சத்திய ஞான


சபையில் அமர்ந்து ‘திருப்புகழ் அமிர்தம்’ என்ற மாதப் பத்திரிகையை வெளியிடக் கருதி ‘கைத்தல நிறைகனி’ என்று தொடங்கும் திருப்புகழ் பாவுக்கு உரை எழுதினார். அது முதல் திருப்புகழ் அமிர்தம் திங்கள் இதழாகப் பிரசுரமாகத் தொடங்கியது.

சுவாமிகள் அந்தப் பத்திரிகையை முப்பத்தேழு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். அந்தப் பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திருப்புகழ் பாடலுக்கு விளக்க வுரையும், கந்தர் அலங்கார உரையும், கற்பு நெறிக்கதையும், வேறு பல கட்டுரைகளும் எழுதப்பட்டன. அந்தப் பத்திரி கையில் வெளிவந்த கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டு தனித்தனி நூல்களாகப் பிரசுரமாயின.

**எழுதிய நூல்கள்**

வாரியார் சுவாமிகள், சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்த பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படியாக 500-க்கும் மேற்பட்ட ஆன்மிக மணம் கமழும் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவர் இயற்றியுள்ள நூல்கள் ஏறத்தாழ நூற்றைம்பது ஆகும். அவற்றுள் சிவனருட்செல்வர், கந்தவேள் கருணை, இராமகாவியம், மகாபாரதம் ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. கேட்கும் செவிக்கும் கற்கும் சிந்தைக்கும் இன்பம் பயக்கும் அவரது சொற் பொழிவுகளுள் 83 சொற் பொழிவுகள் குறுந்தகடுகளில் வெளி வந்துள்ளன.

குழந்தைகளுக்கு ‘தாத்தா சொன்ன குட்டிக்கதைகள்’ என்ற நூலை அவர் எழுதினார். பாம்பன் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற் றையும் வாரியார் எழுதியுள்ளார்.



1993 அக்டோபர் 19ஆம் தேதி வாரியார் சுவாமிகள் லண்டன் பயணமானார். ஆன்மிகத்துக்காகவே பாடுபட்ட வாரியார் சுவாமிகள், 1993-ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி விமானப் பயணத்திலேயே கால மானார்.

**ஆகஸ்ட் 5ஆம் நாள் கிருபானந்த வாரியாரின் பிறந்தநாள் ஆகும்.**

**தொகுப்பு: கே.ஏழுமலை,**
இரண்டாமாண்டு உயிர்த்தொழில் நுட்பத்துறை